பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 03 சனிக்கிழமை 16.05.2020 கதிர் 60



# 936 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மே. 16

இலங்கையில் இன்று ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தொற்றுநோயியல் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதனால் இதுவரை இலங்கையில்கொரோனாத்தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 936 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரையில் இலங்கையில் 407 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதுவரையில் கொரோனா தொற்றினால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு சூறாவளி அபாயம்!

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

**கொழும்பு, மே. 16**

**இலங்கை எதிர்கொண்டுள்ள சூறாவளி அனர்த்தம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**இன்று நண்பகல் நிலவிய வானிலையையடுத்து இந்த அனர்த்தம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.**

2

# ஊரடங்கை மீறினரென 55 ஆயிரம் பேர் கைது!

கொழும்பு, மே 16

ஊரடங்கு விதிமுறைகளை மீறியதற்காக இதுவரை 55 ஆயிரம் பேர் கைது செய்யபட்டுள்ளனர். அவர்களில் 12 ஆயிரம் பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில் 5,400 பேர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதி பொலிஸ்மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவிக்கையில் -

ஊரடங்கு விதிமுறைகளை மீறிய மற்றும் அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட அனுமதியை முறைகேடாகப் பயன்படுத்திய 55 ஆயிரம் பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் 12ஆயிரம் பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 5 ஆயிரத்து 400 பேருக்கு எதிராக நீதிமன்றம் குற்றவாளிகளாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை, தண்டப்பணம் அல்லது இவை இரண்டும் விதிக்கப்படும்.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும். இக்காலப்பகுதியில் அனைவரும் ஊரடங்குச் சட்ட விதிமுறைகளையும் சுகாதார வழிகாட்டல்களையும் முறையாகப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய்யாதவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் - என்றார்.

# துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 16

கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய ஒருவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீனட்டியன, மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில், நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடையைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

கடையொன்றுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, வீடு திரும்பிக்

2

# கசிப்பு உற்பத்தி மையம் வவுனியாவில் முற்றுகை

## இரண்டு பேர் கைது



வவுனியா, மே 16

வவுனியாவில் 5000 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 5 இலட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் குழுவினர் வவுனியா, தவசிகுளம் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது இவை கைப்பற்றப்பட்டன.

தவசிக்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 2500 மில்லி லீற்றர் கசிப்பு, 3 இலட்சத்து 80 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, இரண்டு

2

# நுவரெலியாவில் காற்றுடன் கடும் மழை

கொழும்பு, மே. 16

நுவரெலியா மாவட்டத்தில் கடும்காற்றுடன்கூடிய கடும்மழையினால் ஏற்பட்ட மண்சரிவுகளினால்குடியிருப்புகள்சேதமடைந்து வீதிப் போக்குவரத்துகளும் பாதிப்படைந்துள்ளன.

மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் நேற்று இரவு 140 மில்லிலீற்றர் மழை பெய்துள்ளமையினால் மேல் கொத்மலை காசல்ரி, மவுசாகலை, கெனியன் நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் மவுசாகலை நீர்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன் எனவும் நோட்டன் விமல சுரேந்திர நீர்தேக்கத்தில் நீர் நிறைந்து வழிவதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று இரவு முதல்பெய்த அடைமழையினால் அட்டன், நோட்டன் பிரதான வீதியின் வனராஜா சமர்வில் பகுதியில் இன்று அதிகாலை மண்மேடு சரிந்துள்ளமையினால் அவ்வீதியில் ஒரு வழி போக்குவரத்து இடம்பெற்று வருகிறது.

மேலும் அட்டன் பொகவந்தலாவ பிரதான வீதியில் நிவ்வெளிகம பகுதியில் பாரிய

2

# மேலும் 43 பேர் குணமடைவு!

கொழும்பு, மே. 16

இலங்கையில் மேலும் 43 பேர் குணமடைந்தனர் என்றும் குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியவர்களின் மொத்த எண் ணிக்கை 520 ஆக அதிகரித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை அடையாளம் காணப்பட்ட 935 பேரில் 177 கடற்படையினரும் குணமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பியப் பிரதிநிதிகள் சஜித்தை சந்தித்துப் பேச்சு

கொழும்பு, மே. 16

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பேச்சு நடத்தியுள்ளார்.

கொவிட் - 19 வைரஸ் தொற்று அனர்த்தம் நீடித்து வரும் நிலையில் பல்வேறு விடயங்கள் குறித்து இரு தரப்புக்களுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நோக்கில் ஐரோப்பியஒன்றியம்2.2கோடியூரோக்கள்வழங்கியுள்ளதாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டெனிஸ் சாய்பீ தெரிவித்துள்ளார்.

2

# சொன்னபடி வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலை!

## கைவிரிக்கிறது கோட்டா அரசு

கொழும்பு, மே. 16

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனவும் அரச ஊழியர்களுக்குச் சம்பளத்தைச் செலுத்த முடியாத சிரமமான மட்டத்தில் அரசு இருப்பதாகவும்அமைச்சரவையின்இணை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில்இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2

# ஆனல்ட்டின் அதிகாரங்களை பிடுங்க உதவியதாம் ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், மே 16

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள யாழ். மாநகர முதல்வர் ஆனல்ட் தேர்தல் சட்டங்களுக்கு முரணாக தனது முதல்வர் பதவியின் அதிகாரங்களைப் பிரதிமேயருக்குக்கொடுக்காது தொடர்ந்தும் முன்னெடுத்து வந்த நிலையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சட்டரீதியான நடவடிக்கைகள் காரணமாக தனது பதவியின் அதிகாரங்களை பிரதி முதல்வர் ஈசனிடம் ஒப்படைத்துள்ளார் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஈ.பி.டி.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் வேட்பாளராக யாழ் மாநகர முதல்வர் ஆனல்ட்டும் வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

தேர்தல் விதிமுறைகளின் பிரகாரம் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர் தனது பதவியிலிருந்து யாழ் மாநகர முதல்வர் ஆனல்ட் விடுமுறை பெற்றிருந்திருக்கவேண்டும் என்பதுடன் அப்பதவியின் அதிகாரங்களைப் பிரதி முதல்வரிடம் ஒப்படைத்திருக்கவும் வேண்டும்.

ஆனால் ஆனல்ட் அவ்வாறு செய்யாது தனது பதவிக்கான வாகனம் உள்ளிட்ட சில பொருள்களைச் செயலாளரிடம் ஒப்படைத்துவிட்டு பதவியின் அதிகாரங்களையும் அதன் பொறுப்புக்களையும் தன்னகத்தே வைத்திருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் மாதாந்தக் கூட்டத்தைப் பிரதி முதல்வரை நடத்துமாறும் ஆனல்ட் ஒரு கடிதம் அனுப்பியிருந்த நிலையில் அது தொடர்பில் சபை அமர்வில் பெரும் களேபரம் எழுந்த நிலையில் சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து ஆனல்ட்டின் சட்டவிரோதமானதும் அத்துமீறியதுமான செயற்பாடுகள் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தேர்தல் ஆணைக்குழுவிடம் ஆதாரங்களுடன் முறைப்பாடு செய்திருந்தது.

இந்த முறைப்பாட்டை அடுத்து தேர்தல் ஆணைக்குழு கடிதம் மூலம் யாழ் மாநகர ஆணையாளருக்கு ஆனல்ட்டின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துமாறு கோரியிருந்தது.

இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவையும் கண்டுகொள்ளாத ஆனல்ட் நிதிக்குழு மற்றும் திட்டமிடல் குழுக் கூட்டங்களை நடத்துமாறு பிரதி முதல்வருக்குக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

நிதிக்குழுவின் தலைவர் முதல்வராக இருப்பதால் அவர் வருகை தராதவிடத்து அக்குழுவில் உள்ள ஏனைய ஒருவரைத் தலைவராக தெரிவு செய்தபின் நடத்தலாம் என்ற சட்ட விதிமுறை உள்ள நிலையில், அந்த நிதிக்குழுவில் பிரதி முதல்வர் அங்கம் வகிக்காத சூழலில் அவரைத் தலைமை தாங்கக் கூறியமை சட்டவிரோதமானதென தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீண்டும் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

இந்நிலையில்தனது சட்டவிரோத அதிகாரகையாடலை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சட்டரீதியான நடவடிக்கைகள் காரணமாக முதல்வர் ஆனல்ட் பிரதி முதல்வர் ஈசனிடம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது.

## ஐரோப்பியப் பிரதிநிதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாத்துறை, விவசாயத்துறை அபிவிருத்தி என்பனவற்றுக்காக கூடுதல் தொகை நிதி உதவி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஒரு தொகுதி நிதி மருத்துவ உபகரணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இந்தச் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாண்மையாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவுமாறு சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரியுள்ளார்.

## இலங்கைக்கு சூறாவளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்கிழக்குவங்காள விரிகுடா கடற் பரப்புகளில் விருத்தியடைந்த குறைந்த அமுத்தப் பிரதேசம் ஒரு தாழமுக்கமாக விருத்தியடைந்து இன்று முற்பகல் 05.30 மணிக்கு திருகோணமலைக்கு வடகிழக்காக ஏறத்தாழ 670 கி.மீ தூரத்தில் வட அகலாங்கு 10.40 N இற்கும் கிழக்கு நெடுங்கோடு 87.00 சி இற்கும் இடையில் மையம் கொண்டுள்ளது. இது இன்று விரைவாக ஒரு சூறாவளியாக விருத்தியடைவதுடன் அடுத்த 24 மணித்தியாலங்களில் ஒரு பாரிய சூறாவளியாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அது ஆரம்பத்தில் 17ஆம் திகதி வரை வடக்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து பின்னர் மே 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வடக்கு - வடகிழக்கு திசையில் திரும்பி மேற்கு வங்காள கரையை நோக்கி நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தத் தொகுதியின் தாக்கம் காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடர்ந்து நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென், மேல் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

## நுவரெலியாவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரத்தோடு மண்மேடு சரிந்ததில் அவ் வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

## சொன்னபடி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா என்ற உலக தொற்று நோய் இல்லாத சமயத்தில் அந்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. நீங்கள் அனைவரும் நடைமுறையில் இதனைக் காண்கின்றீர்கள். உலக வரலாற்றில் இப்படியான சம்பவம் ஏற்பட்ட முதல் சந்தர்ப்பம் இது.

தேர்தலின்போது வழங்கிய வாக்குறுதிகளை அதே விதத்தில் நிறைவேற்ற முடியாது. மக்களுக்கு அன்றாடம் சம்பளத்தை வழங்க பொது மக்களிடம் பணத்தைச் சேகரிப்பதில் கூட சிக்கல் இருக்கின்றது.

அரச சேவையை முன்னெடுத்துச் செல்லுதல், பெற்ற கடனுக்கான தவணை மற்றும் வட்டியைச் செலுத்துதல், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குதல், ஓய்வூதிய கொடுப்பனவு, சமூர்த்தி நிவாரண நிதியை வழங்குதல் என இவை அனைத்தும் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இது எவருடைய பணமும் அல்ல, பொதுமக்களின் பணம். இந்தப் பணத்தில் இருந்து கிடைக்கும் அனைத்து வருமானங்களுக்கு கடந்த மாதங்களில் நின்று போயுள்ளனன - என்றார்.

## கசிப்பு உற்பத்தி மையம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரல்கள் என்பன மீட்கப்பட்டமையுடன், இதுதொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் உள்ள பிறிதொரு வீட்டில் இருந்து 2500 மில்லி லீற்றர் கசிப்பு, ஒரு இலட்சத்து 90 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, ஒரு பரல் என்பன மீட்கப்பட்டன. ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருவரிடம் இருந்தும் 5000 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 5 இலட்சத்து 70 ஆயிரம் மில்லி லீற்றர் கோடா, 3 பரல்கள் என்பன மீட்கப்பட்டன.

## துப்பாக்கிச் சூட்டில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தபோது, அவர்களது வீட்டுக்கு அருகில் வசிக்கும் இருவர், வீதியில் காத்திருந்து மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# நுண்நிதி நிறுவனங்களால் பெரும் இக்கட்டில் மக்கள்!

கொழும்பு, மே. 16

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள நுண் நிதிநிறுவன ஊழியர்கள் கடன் வசூலிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதால் கிராமப்புற மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கொரோனோ வைரஸ் தாக்கத்தின் பரவல் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் அன்றாடம் தொழில் செய்து வாழ்வை நடத்தி வரும் தாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, மக்களிடம் கடன் வசூலிக்கும் நிறுவனங்கள், வங்கிகள் தற்போது அதனை அறவிடாமல் கால அவகாசம் ஒன்றை வழங்குமாறு அரசினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கடந்த 11ஆம் திகதி முதல் நாட்டை வழமைக்குக் கொண்டு வரும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நுண்நிதி நிறுவன ஊழியர்கள் கிராமங்களுக்குச் சென்று மக்களிடம் கடன் வசூலிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதனால், ஊரடங்கு காரணமாக தொழில் இன்றி இருந்த தாம் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, தம்மிடம் அறவிடப்படும் கடன் பணத்திற்கு கால அவகாசம் ஒன்றினை வழங்கவேண்டும் என்று அரசிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# அடைமழையால் சேதமுற்ற வீடு கொட்டகலை இன்று விடிகாலை





நுவரெலியா, மே 16

கடும் காற்றுடன் கூடிய அடை மழையால் நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொட்டகலை மேபீல்ட் தோட்டத்திலுள்ள வீடொன்று முழுமையாக சேதமடைந்துள்ளது.

இன்று அதிகாலை 2 மணியளவில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிராந்திய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வீட்டின் கூரைகள் காற்றில்முழுமையாகஅள்ளுண்டு சென்றுள்ளமையுடன் முன் பகுதி சுவரும் இடிந்து விழுந்துள்ளது.

எனினும் வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. குறித்த வீட்டில் வசித்தவர்கள் அயலவர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தேவையான வசதிகளை தோட்ட நிர்வாகத்தினரும், கிராம சேவகரும் செய்து கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முள்ளிவாய்க்கால் நினைவில் தமிழர் தேசமாய் ஒன்றெழுவோம்!

தமிழர் தாயகம், தேசமாக – தேசியமாக – இணைய வேண்டிய நாள் நாளை மறுதினம் வருகின்றது.

தமிழர் தேசத்தின் மீதான சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் கொடூரமான வன்முறை வடிவத்தின் ஒட்டுமொத்த அடக்குமுறையை பிரதிபலிக்கும் ஒரு குறியீட்டு தினம் மே 18 ஆம் நாளாகும்.

முதல் முப்பது வருடங்கள் அஹிம்சைப் போராட்டமாகவும் அடுத்த முப்பது வருடங்கள் உலகையே அதிரவைத்த பெரும் ஆயுதங்கள் சமராடிய களமாகவும் கட்டவிழ்ந்த தமிழர்களின் விடுதலை வேள்வியில், அந்த போராட்ட வடிவங்களில் ஒன்று ஓய்வு நிலைக்கு வந்த நாளும் இதுவே.

சிங்கள இனவாத அரசின் பேரினவாதப் போக்குடைய பங்கரவாத வன்முறைக்கு எதிராக மெல்லப் பீறிட்டுக் கிளம்பிய வன்முறைச் செயற்பாடுகள், ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுத எதிர்ப்பு இயக்கப் படை வடிவமாக பரிமாணம் பெற்றன. அந்த பேரியக்கத்தை சுமார் முப்பது ஆண்டு காலம் உலகத்தையே அதிசயிக்க வைக்கும்விதத்தில்கட்டியாண்டதமிழினம்அதனைத்தொலைத்த இழப்பு நாள் அதுதான்.

சிங்கள இனவாத அரசுகளின் ஈவிரக்கமற்ற அடக்குமுறைப் போக்குகளுக்கு எதிராக தர்ம யுத்தமாகத்தான் தமிழரின் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

அதில் சத்தியத்துக்கும் தர்மத்துக்குமான யுத்தம் ஒன்று மூண்டது.

அதிலே சத்தியத்தின் வாழ்வை சூது கவ்விய தினத்தின் பதினோராம் ஆண்டு நிறைவை – நினைவை – நாளை மறுதினம் தமிழர் தாயகம் சந்திக்கின்றது.

*'தர்மத்தின் வாழ்வு தன்னை சூது கவ்வும்; தர்மம் ஒரு நாள் வெல்லும்'* என்ற மகாபாரத படிப்பினையில் தர்மத்தை சூது கவ்விய காலம் இது. இனி தர்மம் வெல்வதற்கான காலத்தை – வழியை – பயணத்தை – தமிழினம் நம்பிக்கையோடு முன்னெடுக்க வேண்டிய காலம் இதுதான்.

அதிலே முக்கிய ஒரு மைல் கல்லாக வருகின்றது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம்.

*"அடக்குமுறைக்கும்; ஒடுக்குமுறைக்கும் உள்ளான தமிழினம் தங்களின் தேசத்தின் விடுதலைக்காகவும், விடிவுக்காகவும் திடசங்கற்பம் கொண்டுள்ளது. அந்த மக்கள் தாம் உலகில் எங்கிருந்தாலும் அந்த விடுதலையை நெஞ்சில் நிறுத்தி மே 18 ஆம் நாளை அஞ்சலிக்க வேண்டும்."* என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்திருக்கின்றார்.

தமிழரின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம், பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் ஆயுத அடக்குமுறைக் கொடூரத்தின் மூலமே நசுக்கப்பட்டது என்பதை அடையாளப்படுத்தும் தினமாக – ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட அந்த மே 18 ஆம் திகதியைத் துக்கத்தோடு அனுஷ்க்கின்றது தமிழினம்.

ஆயுத முனையில் அடக்கப்பட்டது தமிழரின் ஆயுத வலிமையே தவிர, அவர்களின் விடுதலைத் தாகம் அல்ல. அடங்கிப் போனது ஆயுத முனையில் திருப்பித் தாக்கும் தலைவனின் பண்பியல்பே தவிர, அதற்கான வெஞ்சின உறுதியல்ல. எந்தத் தியாகத்தைப் புரிந்தாவது இனத்தின் இருப்பையும், வாழ்வையும், தொடர்ச்சியையும் தக்க வைக்க வேண்டும் என்ற திடசங்கற்பம் அல்ல.

தலைவன் கூறியமைபோல *'போராட்ட வடிவங்கள் மாறலாம். இலட்சியமும், இலக்கும் மாறாது'* என்ற கூற்றுக்கொப்ப, இழந்து போன போராட்ட வடிவத்தை மறந்தாலும் அதைத் துறந்து அஹிம்சை வழி பயணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டாலும், எம் இலட்சியத்திலும் இலக்கிலும் தளராது உறுதியோடு இருக்கின்றோம் என்பதை அடையாளப்படுத்தி வெளிப்படுத்தும் தினமாகவும் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அமைகின்றது.

*'தோல்வியுற்றோம்; ஆனால் துவளோம். விடுதலைக்காய் வீரியத்தோடு புதுவழியில் எழுவோம். எழுந்து நிற்கின்றோம்!'* என்ற செய்தியை உலகுக்கு எடுத்தியம்பும் தினமாக இதனை மாற்றுவோம்.

கொரோனா தொற்றுப் பரம்பல் என்ற பேரவலத்துக்குள் உலகமே சிக்கி நின்றாலும் கூட –

அந்த நெருக்குவாரத்துக்கு மத்தியிலும் எமது எழுச்சியை ஓரிடத்தில் பெரும் எண்ணிக்கையாய் ஒன்று திரளாமல் நாம் வெளிப்படுத்திக் காட்ட முடியும்.

அஞ்சலி செய்தல், விளக்கேற்றுதல், திடசங்கற்பம் கொள்ளுதல், ஒரு நேரக் கஞ்சியுடன் முள்ளிவாய்க்கால் பேரழிவு நிலையை நினைவூட்டுதல் என்று இத்தினத்தை அனுஷ்டிக்கும் வழி முறைகள் காட்டப்பட்டு நாம் நெறிப்படுத்தப்பட்டுள்ளோம்.

அந்த வழிகளில் உணர்பூர்வமாக ஒன்றிப்பதன் மூலம் தேசமாய் ஒன்றெழுவோம்!

# பட்டதாரிகளுக்குத் தொழில் தேடும் வகையில் உயர்கல்வித்துறையை உடன் மறுசீரமையுங்கள்!

## பல்கலைக்கழக அதிகாரிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே. 16

*பல்கலைக்கழக கல்வியை நிறைவுசெய்து சமூகத்திற்குள் பிரவேசிக்கும் பட்டதாரிகளுக்கு இலகுவாக தொழில்களை தேடிக்கொள்வதற்கு உதவும் வகையில் உயர் கல்வி முறைமையை தயாரிக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.*



பல்கலைக்கழக கல்வி பற்றி எத்தகைய வியாக்கியானங்கள் இருந்த போதும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் இளையோர்களுக்கு தொழிலொன்றை தேடிக்கொள்ள முடியாதாயின் அது சரியான கல்வி முறையாக இருக்க முடியாது.

பட்டதாரிகள் தொழில் கேட்டு ஊர்வலம் செல்வதற்கு பதிலாக தொழில்கள் அவர்களைத் தேடி வரும் கல்வி முறைமையே தேவையாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட பல்கலைக்கழக துணைவேந்தர்களுடன் நேற்று மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் பேரிலேயே மீண்டும் திறக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைக் கல்வி முறைமையை மேலும் மேம்படுத்துவதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவித்தார். எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தில் 30 வீதத்தினரையாவது ஒன்லைன் அதாவது இணைய வழிக் கல்விக்கு உட்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் கல்வி கற்றுவந்த ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்களை கோவிட் - 19 நோய்த்தொற்று பரவலுடன் நாட்டுக்கு அழைத்து வர வேண்டியிருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இவ்வளவு அதிகமான மாணவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது நல்ல அறிகுறியல்ல என்று குறிப்பிட்டார்.

'இவர்களது கல்விக்காக அதிகளவு அந்நியச் செலாவணி வெளிநாடுகளுக்கு செல்கின்றது. பிள்ளைகள் தம்மை விட்டும் தூரமாகியிருப்பது பெற்றோருக்கு அழுத்தத்தை தருவதாக உள்ளது. இந்த நிலமைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டுமானால் பல்கலைக்கழக கல்வி பல்வகைப்படுத்தப்பட வேண்டும். தொடர்பாடல் தொழிநுட்பம் உள்ளிட்ட புதிய தொழிநுட்ப அறிவு, தாதி தொழில், சுற்றுலா, ஆசிரியர் தொழில் போன்ற துறைகளில் பட்டப் பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்' என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மாணவர்களை இலக்காகக் கொண்டு குறைந்த செலவில் புதிய கணினிப் பாகங்களை ஒன்றிணைக்கும் இயலுமை குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக பொறியியல் பீடம் உள்ளிட்ட இதுபோன்ற பாட அறிவுடன் கூடியவர்களுக்கு இதற்கு உதவ முடியும். எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கணினியொன்றை பெற்றுக்கொள்ளும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். உயர் தர பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் தகைமை பெறும் அனைவருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு நுழைய முன்னர் வீடுகளில் இருந்து ஆங்கிலம் மற்றும் கணினிக் கல்வியை வழங்க திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை தொடர்பில் ஜனாதிபதி வினவியதற்கு பதிலளித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இம்முறை மாணவர் அனுமதி 7 ஆயிரத்து 500 பேரினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக ஆகியோர் உள்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவது சாத்தியமற்றது

## கூறுகின்றார் பொன்சேகா

கொழும்பு, மே. 16

ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதிர்காலத்தில் இணைவது என்பது சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், தங்கள் ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஐ.தே.க.வுடன் இணைவதை விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்கள் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன பற்றிச் சாதகமாக பேசுகிறார்கள். மேலும் அழைப்பு விடுக்கப்பட்டால் அவர்களுடன் இணைவது குறித்து பரிசீலிப்பேன் என்றும் கூட அவர் கூறியிருந்தார்.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தோற்கடிப்பதே என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.


மேலும் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் எதிரானவர்கள் அல்லர், ஆனால் தற்போது அதன் தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கொரோனா வைரஸுக்கு எதிரான செயன்முறையில் அரசாங்கம் கையாண்ட விதம் தொடர்பாக விமர்சித்த பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா, இது குறித்து இன்னும் சந்தேகம் இருப்பதாகக் கூறினார்.

தேர்தல்களை நடத்துவதில் அரசு தற்போது மும்முரம் காட்டி வருகின்றது. ஆனால் இந்த நோயை எதிர்த்துப் பணியாற்றிய சுகாதார வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் ஒப்புதலுடன் மட்டுமே இது நடத்தப்பட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கொரோனா பாதிப்புகளில் சீனாவை முந்தியது இந்தியா

## 85,940 பேருக்கு நோய்த்தொற்று



புதுடெல்லி,மே16

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைஜ் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறி உள்ளவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன.

தற்போது கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள பகுதிகளில் ஊரடங்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பல்வேறு தொழில்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேசமயம், பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை இன்று வெளியிட்டுள்ள தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 85,940 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,752 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 30,153 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

இதன்மூலம் கொரோனா பாதிப்பில் சீனாவை இந்தியா முந்தியதுடன், உலக அளவில் 11 ஆவது இடத்திற்கு சென்றுள்ளது.

கொரோனா வைரஸ் வெளிப்பட்ட சீனாவில் இதுவரை 82,941 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். 4,633 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாராஷ்டிராவில் பேரிடர்



மும்பை,மே16

மகாராஷ்டிராவில் 29 ஆயிரத்தை கடந்தது கொரோனா பாதிப்பு எண்ணிக்கை. அங்கு கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாவால் 49 பேர் மரணமடைந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பாதிப்பில் சீனாவை இந்தியா முந்தி உள்ளது. மத்திய சுகாதாரத்துறை இன்று காலை வெளியிட்ட தரவுகளின்படி, இந்தியாவில் மொத்தம் 85,940 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,752ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 30,153பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிர மாநிலம் தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. மகாராஷ்டிராவில் மொத்தம் 29,100பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மட்டும் 1,576 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 49 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் மொத்த உயிரிழப்பு 1,068ஆக உயர்ந்துள்ளது. 6,564 பேர் கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டுள்ளனர்.

கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள மாநிலங்கள் வருமாறு:-

* ஆந்திரா - 2,307
* பீகார் - 1,018
* டெல்லி - 8,895
* குஜராத் - 9,931
* கர்நாடகா - 1,056
* மத்தியப் பிரதேசம் - 4,595
* மகாராஷ்டிரா - 29,100
* பஞ்சாப் - 1,935
* ராஜஸ்தான் - 4,727
* தமிழ்நாடு - 10,108
* தெலுங்கானா - 1,454
* உத்தரபிரதேசம் - 4,057
* மேற்கு வங்கம் - 2,461.

# லொறிகள் நேருக்கு நேர் மோதி விபத்து 24 பேர் சாவு; 15 பேரின் நிலைமை மோசம்

## ஊரடங்குக்கு மத்தியில் ராஜஸ்தானில் ஏற்பட்ட சோகம்



ராஜஸ்தானில் தங்கி வேலை பார்த்த வெளிமாநில தொழிலாளர்கள் நேற்று இரவு லொறி மூலம் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் சென்ற லொறி, இன்று அதிகாலையில் உத்தரபிரதேச மாநிலம் அவ்ரயாவில் சென்றபோது மற்றொரு லொறியுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் புலம்பெயர் தொழிலாளர்கள் 24 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர். அவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

சமீப நாள்களாக நாடு முழுவதும் ஊரடங்கால் புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு நடைபயணமாகவும் டிரக்கிலும் திரும்பும் வழியில் பல்வேறு விபத்து சம்பவங்கள் நடந்து வருகின்றன. அண்மையில் மகாராஷ்டிராவின் அவுரங்காபாத்தில் தண்டவாளத்தில் ஓய்வெடுத்த தொழிலாளர்கள் மீது சரக்கு ரயில் மோதியது. இதில் 17 பேர் அதே இடத்தில் துடிதுடித்து



இறந்த சம்பவம் ஒட்டுமொத்த நாட்டையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து உத்திரப்பிரதேசம் நோக்கி புலம்பெயர் தொழிலாளர்கள் லாரியில் சென்று கொண்டிருந்தனர். ஆரையா என்ற பகுதியில் இன்று அதிகாலை 3.30 மணிக்கு சென்றபோது, தொழிலாளர்கள் சென்ற லொறி மீது மற்றொரு லொறி மோதிக் கொண்டதில் கோர விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில், 23 புலம்பெயர் தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 15 முதல் 20 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.அவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். இவர்கள், பீகார், மேற்குவங்கம், ஜார்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் என்று தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் விபத்து:

இதனைபோல், பஞ்சாப் மாநிலத்தில் இருந்து பீகார் நோக்கி தொழிலாளர்கள் நடைபயணமாக புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் உத்தரப்பிரதேசத்தின் முசாபர்நகர் அருகே தேசிய நெடுஞ்சாலை எண் 9 இல் நேற்று இரவு சென்று கொண்டிருந்தனர். அப்போது உத்தரப்பிரதேச மாநில அரசு பஸ் ஒன்று இந்த தொழிலாளர்கள் மீது திடீரென மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே 6 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர்.

மேலும், மத்திய பிரதேசத்தில் 60க்கும் அதிகமான தொழிலாளர்களுடன் சென்ற டிரக் ஒன்று பஸ் மீது மோதியது. இதில் சம்பவ இடத்திலேயே 8 பேர் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்த 8 பேரும் மகாராஷ்டிராவில் இருந்து உத்தரப்பிரதேசத்தில் உள்ள சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த தொழிலாளர்கள். இப்படி சொந்த ஊர் சென்ற இடம்பெயர் தொழிலாளர்களில் 60 க்கும் அதிகமானோர் விபத்துகளில் சிக்கி உயிரிழந்துள்ளது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# கொரோனாவுக்கு எதிராக இணைந்து போராட அமெ. - இந்தியா கங்கணம்



## டிரம்பின் உதவிகளுக்கு மோடி நன்றி

இந்தியாவிற்கு வென்டிலேட்டர்கள் நன்கொடையாக அளிக்கப்படும் என்ற அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர் மோடி, இந்த நடவடிக்கை இரு நாட்டு உறவுக்கு மேலும் வலு சேர்க்கும் என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் உள்ள நண்பர்களுக்கு, அமெரிக்கா வென்டிலேட்டர்கள் நன்கொடையாக அளிக்கும் என அறிவிப்பதில் தாம் பெருமை கொள்வதாக ட்விட்டர் பக்கத்தில் அதிபர் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

தடுப்பூசி உருவாக்குவதிலும் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து செயல்படுகின்றன எனக் கூறியிருந்த டிரம்ப், கண்ணுக்கு தெரியாத கொரோனா எதிரியை இணைந்து முறியடிப்போம் எனத் தெரிவித்திருந்தார்.

இதற்காக அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவிப்பதாக ட்விட்டரில் பதிவிட்டுள்ள பிரதமர் மோடி, நாம் அனைவரும் இணைந்து கொரோனாவுக்கு எதிராக கூட்டாகப் போராடுவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தலா 10 லட்ச ரூபாய் மதிப்புள்ள, 200 மொபைல் வென்டிலேட்டர்களை இந்தியாவுக்கு விமானம் மூலம் அமெரிக்கா அனுப்ப உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விஷ சாராயம் குடித்த 35 பேர் மெக்ஸிக்கோவில் உயிரிழப்பு

மெக்சிகோ சிட்டி,மே 16

மெக்ஸிக்கோவில் மெத்தனால் கலந்த விஷ சாராயத்தை குடித்த 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கொலைகார கொரோனா வைரஸால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முதல் நாடாக அமெரிக்கா உள்ளது. அதன் அண்டை நாடான மெக்ஸிக்கோவில் கொரோன வைரஸ் பாதிப்பு மிக தீவிரமாக உள்ளது.

அந்த நாட்டில் இதுவரை 42 ஆயிரத்து 500இற்கும் மேற் பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. 4 ஆயிரத்து 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த மெக்ஸிக்கோ முழுவதும் ஊர டங்கு அமல்படுத்தப்பட்டு மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக் கப்பட்டுள்ளன. ஊரடங்கு காரணமாக மெக்ஸிக்கோவில் மதுக் கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் மது கிடைக்காமல் அல்லல்படும் மதுபிரியர்கள் கள்ளச்சந்தையில் விற்கப்படும் மெத்தனால் என்ற வேதிப் பொருள் கலந்த வி சாராயத்தை வாங்கி குடிக்கின்றனர்.

இந்த நிலையில் பியூப்லா மாகாணத்தில் மெத்தனால் கலந்த விஷ சாராயத்தை குடித்த 20 பேர் பரிதாபமாக உயிரிழந்த னர். இதே போல் மோரலோஸ் மாகாணத்தில் ஒரு பெண் உள் பட 15 பேர் விஷ சாராயம் குடித்ததால் பரிதாபமாக இறந்த னர்.

முன்னதாக கடந்த மாத இறுதியில், ஜாலிஸ்கோ மாகாணத் தில் தரக் குறைவான மது அருந்திய 25 பேரும், அகான்சே மாகாணத்தில் எரிசாராயம் குடித்த 7 பேரும் உயிரிழந்தமை நினைவுகூரத்தக்கது.

## எந்த சிகிச்சைக்கும் ஒப்புதல் இல்லை

கொரோனாநோய்க்கானசிகிச்சை முறை எதற்கும் இதுவரை ஒப்பு தல் அளிக்கவில்லை என்று உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித் துள்ளது.

அந்தஅமைப்பின்சுகாதாரநெருக் கடிகள் திட்ட தொழில்நுட்ப பிரிவு தலைவர் மரியா வான் கெர்கோவ் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஆய் வுக்கூட பரிசோதனையில் (clinical trials) ஏராளமான சிகிச்சை முறை கள் இருப்பதாகவும், இதில் எந்த சிகிச்சை முறைக்கும் உலக சுகா தார அமைப்பு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை எனவும் தெரிவித் துள்ளார்.

ஆய்வுக்கூட பரிசோதனை முடி வுகளுக்காக உலக சுகாதார அமைப்பு காத்திருப்பதாகவும், அதன்பிறகே எந்த சிகிச்சை முறைக்கு ஒப்புதல் அளிப்பதென முடிவு எடுக்கப்படு மென்றும் அதில் கூறியுள்ளார்.

## இங்கிலாந்தில் தொழில்துறைக்கான மையம் ஒன்றில் பயங்கரமான தீ விபத்து

இங்கிலாந்து தலைநகர் லண்டனின் கிழக்குப் பகுதியில் உள்ள தொழில்துறை எஸ்டேட்டில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்ததும் 120 தீயணைப்பு வாகனங்களில் விரைந்து சென்ற தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர்.

தீ விபத்துக் காரணமாக அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்பட்டதால் வீடுகளில் இருந்த மக்கள் ஜன்னல் மற்றும் கதவுகளை மூடிக் கொண்டு பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இந்த விபத்துக்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை என்று தீயணைப்பு வீரர்கள் தெரிவித்தனர்.

## பாக். அணு ஆராய்ச்சி தந்தை தான் சிறையில் என்று வேதனை



பாகிஸ்தான் அணு ஆராய்ச்சி திட்டத்தின் தந்தையான அப்துல் காதீர் கான், தான் சிறைவைக் கப்பட்டிருக்கிறார் என அந்நாட்டு உச்சநீதிமன்றத் திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

தனது ஆலோசகர் மூலம் அவர் கைப்பட எழுதி அனுப்பிய அந்த கடிதத்தில் நீதிமன்றத்தில் முறை யீடு செய்வதற்குக் கூடத் தான் அனுமதிக்கப்பட வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் அணு ஆயுதங்களைக் கையா ளும் செயலாக்க திட்டப்பிரிவு அதிகாரிகள் தம்மை உச்சநீதிமன்றத்துக்கு அழைத்து வந்த போதும், வழக்காடு மன்றத்துக்குள் அனுமதிக்கவில்லை எ புகார் கூறியுள்ள அவர், எனவே தனது அடிப்படை உரிமைகளை பாதுகாக்கப்படாதோடு, தனது தரப்பு வாதத்தை முன்வைக்க அனுமதிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடகொரியா, லிபியா ஆகிய நாடுகளுக்கு அணு ஆயுதங்கள் தயாரிக்க தேவையான உபகரணங் கள் கிடைப்பதற்கு காதீர் கான் உதவினார் எனக் கடந்த 2004 ஆம் ஆண்டு குற்றம்சாட்டப்பட்டது.

## 3 சகோதரங்களையும் பெற்றோரையும் வீட்டுடன் தீவைத்துக் கொளுத்தியவர்!

### பாக். பஞ்சாப் மாகாணத்தில் கொடூரம்

இஸ்லாமாபாத்,மே 16

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ளது தஸ்கா நகரின் முகமதுபுரா பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் மூன்று சகோதர,சகோதரி மற்றும் பெற் றோரை ஒரு இளைஞர் வீட்டிற்குள் பூட்டி வைத்து தீயிட்டு கொளுத்தி உள்ளார்.

குற்றவாளியை பொலிஸார் தற்போது கைது செய்துள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர் 25 வயதான அலிஹம்சா என அடையாளம் காணப்பட்டார் என்றும் அவரது கெட்ட பழக்கங்கள் மற்றும் போதைப் பழக்கத்தின் காரணமாக அவரது குடும்பத்தினருடன் சண்டை யிட்டு வந்துள்ளார் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்து ஏற்பட்டு மொத்த குடும்பமும் கொல் லப்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தத் தாம் முயன்றார் எனவும் அஹம்சா இப்போது பொலி ஸாரிடம் ஒப்புக் கொண்டுள்ளார்.அவரது தந்தை முஹம்மது அஷ்ரப் மற்றும் தாய் யஸ்மீன் பிபி ஆகியோர் சம்பவ இடத்திலேயே இறந்தனர்.

சகோதரிகள் சோபியா மற்றும் ஃபவுசியா மற் றும் சகோதரர் ஹைதர் ஆகியோர் சில நாள்களுக் குப் பிறகு லாகூரின் மாயோ மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளனர்.ஹம் சாவின் இளைய சகோதரி ஹர்ரம் ஹெஜ்சாதி மற்றும் சகோதரர் அலி ராசா ஆகியோர் தீக்காயங்களுடன் இன்னமும்தங்கள்உயிருக்குப்போராடிவருகின்றனர் எனப் பொலிஸ்வதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவிலிருந்து விடுபட்டது கம்போடியா



கொரோனா நோயால் தங்கள் நாட்டில் பாதிக்கப்பட்டோர் அனைவரும் குணமடைந்து விட்டனர் எனவும், ஏப்ரல் 12 ஆம் திகதிக்குப் பிறகு யாருக்கும் பாதிப்பு கண்டறியப்படவில்லை எனவும் கம்போடியா நாடு தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் 122 பேருக்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டு 121 பேர் பலகட்டங்களாக குணமடைந்தனர். கடைசியாக 36 வயது பெண் மட்டும் சிகிச்சை பெற்ற நிலையில், அவரும் சிகிச்சையில் குணமடைந்து வீடு திரும்பினார்.

இதையடுத்து இந்த அறிவிப்பை கம்போடியா சுகாதார அமைச் சகம் வெளியிட்டுள்ளது. இருப்பினும் பொதுமக்கள் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருக்க கம்போடியா சுகாதார அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

## மூங்கில் பற்றாக்குறையால் கனடாவிலிருந்து சீனாவுக்கு மீளஅனுப்பப்படும் பாண்டா கரடிகள்

ஒட்டாவா, மே 16

ஊரடங்கு காரணமாக கனடாவில் மூங்கில் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளதால் 2 பாண்டா கரடிகளை சீனாவுக்கு திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

கனடா - சீனா இடையிலான 10 ஆண்டு ஒப்பந்தத் தின் ஒரு பகுதியாக கடந்த 2014 ஆம் ஆண்டு சீனாவில் இருந்து 2 பாண்டாக் கரடிகள் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எஷர் ஷைன் மற்றும் டா மாவோ என்று பெயரிடப் பட்ட இந்த 2 பாண்டா கரடிகளும் டொரோண்டோவில் உள்ள உயிரியல் பூங்காவில் 5 ஆண்டுகளை கழித்தன. அதன்பிறகு 2018 ஆம் ஆண்டு இறுதியில் கல்காரி உயிரியல் பூங்காவுக்கு இந்த பாண்டா கரடிகள் மாற்றப் பட்டன.

இந்த 2 பாண்டா கரடிகளும் மூங்கில்களை விரும்பி



சாப்பிடும். ஒவ்வொரு பாண்டா கரடியும் நாள் ஒன்றுக்கு 40 கிலோ வரை மூங்கில்களை உணவாக எடுத்துக் கொள்ளும் என உயிரியல் பூங்கா நிர்வாகம் கூறுகிறது. பாண்டா கரடிகளுக்காக சீனாவில் இருந்து தனி விமா னம் மூலம் மூங்கில்கள் கொண்டு வரப்பட்டு வந்தன.

தற்போது கொரோனா வைரஸ் காரணமாக கனடா - சீனா இடையிலான விமானப்போக்குவரத்து தடைப் பட்டுள்ளதால் பாண்டா கரடிகளுக்கு மூங்கில் கிடைக் காமல் போனது. வேறு வழிகளில் மூங்கில்களை இறக் குமதிசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

எனவே 2 பாண்டா கரடிகளையும் சீனாவுக்கே தி ருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக கூறும் உயிரியல் பூங்கா நிர்வாகம் அரசிடம் இருந்து அனுமதி கிடைத்ததும் விரைவில் அவை அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

# தனியார் துறையில் பணி புரியும் ஊழியருக்கு சம்பளத்தை ஒழுங்காக வழங்க நடவடிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக செயலிழந்துள்ள தனியார் துறையில் பணி புரியும் ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளத்தின் அரைவாசி அல்லது குறைந்தபட்சம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பளத்தின் அரைவாசி அல்லது குறைந்தபட்சம் 14,500 ரூபா ஆகிய இரண்டில் எது கூடுதலானதோ அத்தொகையை சம்பளமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக, அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கடந்த வியாழனன்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் இணைந்து இலங்கையிலுள்ள முதலாளிமார் சம்மேளனம் உள்ளிட்டவர்களுடன் இது தொடர்பிலான பல்வேறு விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இம்முடிவுக்கு வந்துள்ளனர் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதன்போது கொவிட் – 19 வைரஸ் காரணமாக தனியார் துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனங்களில் பணி புரிகின்ற, ஊழியர் சேமலாப நிதியம் செலுத்தப்படும், சம்பளப் பட்டியலில் சம்பளம் பெற்று வரும் எந்தவொரு ஊழியர்களையும் பணியிலிருந்து நீக்காதிருக்கவும் முதலாளிமார் சம்மேளனத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமது தொழில்துறையை மூடாது, மீளக் கட்டியமைத்து, புத்துயிர் பெறப்படும் வரை, மாதாந்த சம்பளத்தின் அரைவாசி அல்லது குறைந்தபட்சம் ரூபா 14,500 ஆகிய இரண்டில் எது கூடுதலானதோ அத்தொகையை சம்பளமாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஊழியர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களது தொழில் வாய்ப்புக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலும் தொழில் வழங்குநருக்கு ஏற்படும் பாதிப்பை ஓரளவுக்கு குறைக்கும் வகையிலும் இத்தீர்மானம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

சம்பளம், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர்களின் அறக்கட்டளை நிதி, கடன்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை தொழில் தருநர் செலுத்த வேண்டிய கடப்பாடுகளுக்குள் காணப்படும் நிலையில் இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகமாக தனியார் நிறுவனங்களில் பணி புரிகின்ற ஊழியர்கள் காணப்படுகின்றனர். சிறு, நடுத்தர, பாரிய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள இவர்கள் பொருளாதார இயந்திரத்தின் பெரும் பங்கை வகிக்கின்றனர்.

அரசாங்கத்திற்கு பாரமற்ற ஒன்றாக தனியார் பிரிவு காணப்படுவதோடு, அரசாங்கத்திற்கு வருமானம் வழங்குகின்ற, வரி செலுத்துகின்ற பிரிவாகவும் அது காணப்படுவதோடு, பெருமளவிலானோருக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் தருகின்ற ஒரு பிரிவாகவும் அது காணப்படுகின்றது என அமைச்சர் பந்துல குணவர்தன இதன்போது சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் மாத்திரமல்லாது, தனியார் பிரிவு உள்ளிட்ட அனைத்து நாடுகளும் கஷ்டத்துக்கு முகம் கொடுத்துள்ளன. தற்பொழுது பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்பட்டு, வருமானம் இன்றிய நிலையில் பல லட்சக்கணக்கானோருக்கு எவ்வாறு சம்பளம் வழங்குவது எனும் பிரச்சினை எழுகின்றது. மேற்கத்திய நாடுகளில் இப்பிரச்சினைக்கு வீடுகளுக்கு அனுப்புவதே தீர்வாகக் காணப்படுகின்றது என தெரிவித்த அமைச்சர், இலங்கையில் அவ்வாறான ஒரு முடிவு எடுக்கப்படவில்லை என தெரிவித்தார்.

## நாளை முழு ஊரடங்கு

நாடு முழுவதும் இன்று சனிகிழமை இரவு 8 மணி முதல் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களை தவிர்த்து ஏனைய பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கு சட்டம் இன்று காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

எப்படியிருப்பினும் கொழும்பு மற்றும் கம்பஹாவை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் மே மாதம் 18ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கும் ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மே மாதம் 23ஆம் திகதி வரை இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மாத்திரம் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையை முன்னெடுக்கும் நடவடிக்கை கடந்த 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மே மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வேலைத்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்து செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் நாள்களிலும் தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கமைய செயற்படுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## 9 மாவட்டங்களில் மண் சரிவு அபாயம்

இலங்கையின் பல பிரதேசங்களிலும் நிலவும் மழையுடன் கூடிய கால நிலையால் 9 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை, இரத்தினப்புரி, களுத்துறை, கொழும்பு, மாத்தளை, குருநாகல், கேகாலை மற்றும் கண்டி மாவட்டங்களில் இவ்வாறாக மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 மணி நேரத்திற்கு மழை தொடருமாக இருந்தால் இந்த மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் ஏற்படக் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த மாவட்டங்களில் வசிப்போர் இது தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

## சீரற்ற காலநிலை காரணமாக கேகாலையில் இரு மரணங்கள்

கொழும்பு, மே. 16

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக கேகாலையில் இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளன.

கேகாலை, வட்டாரம கால்வாயில் அடித்துச் செல்லப்பட்ட ஒருவரும், வல்தெனிய பகுதியில் வீடொன்றில் மண்மேடு சரிந்து விழுந்ததில் பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 48 வயதுடைய ஆண் என்றும் மற்றவர் 65 வயதுடைய பெண் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## மட்டக்களப்பு கல்லடியில் வாள் வெட்டில் ஒருவர் பலி



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி வேலூர் பிரதேசத்தில் இனந் தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகி ஆண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர் .

கல்லடி வேலூர் 4 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான 30 வயதுடைய இராமசந்திரன் மனோரதன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு இவர் வீட்டில் இருந்துள்ள நிலையில. மாலை சுமார் 6.30 மணியளவில் அவருடைய கையடக்கத் தொலைபேசிக்கு வந்த அழைப்புக்கு அவர் பதில் அளித்தவாறு வீட்டின் பின்பகுதியான வெற்று காணிப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

இதன் பின்னர் சுமார் அரை மணித்தியாலயத்தின் பின்னர் ஒரு சத்தம் கேட்டது அதனையடுத்து அங்கு உறவினர்கள் சென்றபோது தலையால் இரத்தம் வழிந்து உயிரிழந்த நிலையில் கிடப்பதைக் கண்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதே வேளை இந்த கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மண்டூர் பகுதியைச் சேர்ந்த இருவரை காத்தான்குடி பொலிசாரும் குற்றப் புலனாய்வு பிரிவினரும் இணைந்து இன்று அதிகாலையில் கைது செய்துள்ளனர்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்காணி தேவை**

மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயண உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது. உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 078 284 5000

**காலைக்கதிர்** Kalaikkathir மாலைப்பதிப்பு

விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு. வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை. (வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 411 4422

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**

சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)

தொடர்புகளுக்கு: 076 100 5277

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்படலாம்

## சஜித் தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 16

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்றும் எதிர்காலத்தில் மேலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் கைது செய்யப்படுவார்கள் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டதை அடுத்து, நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் கூட்டு செய்தியாளர் சந்திப்பை நடத்திய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த சம்பிக்க ரணவக்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து 2014 இல் அரசை விட்டு வெளியேறிய அமைச்சர்களில் சேனாரத்னவும் ஒருவர்.

ராஜித சேனரத்ன 2014 இல் எடுத்த அரசியல் முடிவின் விளைவாக உயர் பதவிகளுக்குச் சென்ற சிலர் தற்போதைய அரசின் கூட்டாளிகளாக மாறியிருப்பது எங்களுக்கு வருத்தமளிக்கிறது என கூறினார்.

இதேவேளை எதிர்காலத்தில் கைது செய்யப்படவிருக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயரும் பட்டியல் இருப்பதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளார். மேலும் நாங்கள் சிறைகளுக்குப் பழகிவிட்டமையால் எதற்கும் பயப்படப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ராஜித சேனாரத்னவின் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் ஜனநாயக வழிமுறைகள் மூலம் இந்த பழிவாங்கலுக்கு எதிராக நாங்கள் போராடுவோம் என்றும் கருத்து தெரிவித்திருந்தனர்.

# கிழக்கில் சுனாமி அபாயம் இல்லை

## கிணறுகள் திடீரென வற்றுவது குறித்து அச்சம் வேண்டாம்



மட்டக்களப்பு, மே. 16

கிழக்கு மாகாணத்தின் கடற்கரையை அண்டிய பல பிரதேசங்களில் கிணறுகள் வற்றுவதாகவும் இதனால் சுனாமி அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் மக்கள் பீதியடையத் தேவையில்லை என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக இன்று சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் இந்நிகழ்வு சாதாரணமானது எனக் குறிப்பிட்டார்.

அவர் கூறுகையில், கிழக்கு மாகாணத்தின் கடற்கரையை அண்டிய பல பிரதேசங்களில் கிணறுகள் வற்றுவதாகவும் இதனால் சுனாமி அபாயம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் மக்கள் பீதியடையத் தேவையில்லை. இது சாதாரணமாக நிகழ்கின்ற ஒரு விடயமாகும்.

இதுபோன்ற நிலைமைகள் கடந்த 2018ஆம் ஆண்டு ஏற்பட்டது. அதனால் அபாய நிலைமைகள் அனர்த்தங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனவே இதுதொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை. இது அனர்த்த நிலைமைகள் ஏற்படுவதற்கான நிகழ்வுகள் அல்ல.

இதேவேளை, தற்பொழுது இலங்கையில் தாழமுக்க நிலை காணப்படுவதனால் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் கடலில் அதிகமான உயரமான கடல் அலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன – என்றார்.

# மே 18 ஆலயங்களில் விளக்கேற்றி விசேட பூசை வழிபாடுகள் நடத்துக

## யாழ். மாவட்ட சர்வ மதப் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், மே. 16

முள்ளிவாய்க்கால் நினைவுகூரல் தொடர்பாக யாழ். மாவட்ட சர்வ மதப் பேரவை அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிவிப்பில், எமது நாட்டில் 11 ஆண்டுகளுக்கு முன்பதாக ஒரு மரண அவலம் நடந்தேறியது. அதனை ஒவ்வொரு ஆண்டும் உணர்வு பூர்வமாக நினைவுகூர்ந்து வருவதுண்டு.

இவ்வாண்டு கொரோனா சூழ்நிலை காரணமாக எமது அஞ்சலிகளை வீடுகளில் இருந்து நிறைவேற்ற அழைக்கப்படுகின்றீர்கள்.

மதத் தலைவர்களாக, மத விழுமியங்களை கருத்திற்கொண்டு வணக்கஸ்தலங்களில் வரும் 18 ஆம் திகதி மாலை 6.15 மணிமுதல் 6.18 மணி வரை மணிகளை ஒலிக்கச் செய்து தொடர்ந்து விளக்கேற்றி விசேட பூசை வழிபாடுகளைச் செய்யுமாறு யாழ். மாவட்ட சர்வ மதப் பேரவையின் மதத் தலைவர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir

தேயிலைத் தோட்டம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளைய (17.05.2020) தலைப்பு
தேயிலைத் தோட்டம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# யாழில் மூன்று இடங்களில் 4 ஆம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே. 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் 4ஆம் நாள் நினைவு நாள் குருநகா புனித யாகப்பர் தேவாலயம், மற்றும் தமிழாராச்சி மாநாட்டு நினைவிடம் ஆகியவற்றில் ஈகச் சுடரேற்றப்பட்டு நினைவு கூரப் பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நினைவேந்தலில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாா நினைவேந்தலுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டதுடன், நினைவேந்தலில் கலந்து கொண்டிருந்தவாகளையும், குறிப்பாக ஊடகவியலாளாகளையும் தனித்தனியாகத் தமது தொலைபேசியில் புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்து கொண்டிருந்தனர்.

சமூக இடைவெளி பேணப்படவில்லை எனப் பொலிஸார் குற்றஞ்சாட்டியதுடன், யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டால் கைது செய்வேன் என அச்சுறுத்தினர்.

இதனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவா கஜேந்திர குமார் பொன்னம்பலத்துக்கும் பொலிஸ் அதிகாாக்குமிடையில் காரசாரமான வாக்குவாதம் இடம்பெற்றிருந்தது.







# தொடர்ந்து பெய்யும் மழையால் கங்கைகளின் நீர்மட்டம் உயர்வு



கொழும்பு, மே. 17

களு, களனி, கிங் கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் அவற்றின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பல பாகங்களில் அடைமழை பெய்யுமென இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. மேல், தென், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களில் இன்று 200 மில்லி மீற்றரைத் தாண்டிய மழை வீழ்ச்சி பதிவாகலாம்.

இதேவேளை, வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில்,

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள கடற்பரப்புகளிலும் விருத்தியடைந்துள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் அதே கடற்பரப்பில் ஒரு தாழமுக்கமாக விருத்தியடைவதுடன் ,நேற்று தென் வங்காள விரிகுடா கடற்பரப்பிற்கு மேலாக ஒரு சூறாவளியாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. அது வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தத் தொகுதியின் தாக்கம் காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென்மேற்குப் பகுதியில் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை தொடர்ந்து நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 150 மி.மீ க்கும் அதிகமான மிகப் பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 – 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் மேல் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சில இடங்களில் 150 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

# அரசு பக்கம் ஒருபோதும் தாவவே மாட்டாராம் ரவி

கொழும்பு, மே. 17

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரச தரப்பிற்கு கட்சி தாவவுள்ளார் என வெளியான செய்திகளை மறுத்துள்ள ரவி கருணநாயக்க, தவறான தகவல்களைப் பரப்புபவர்கள் முதலில் தங்கள் பிழைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கே இவ்வாறு செயற்பட்டு வருகின்றோம். எவ்வாறாயினும், தவறான தகவல்களைப் பரப்புபவர்கள், நாங்கள் உண்மையில் என்ன செய்ய முயற்சிக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த காலத்தில் பொதுமக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும்போது அதில் அரசியல் இலாபம் தேட முற்பட்ட 21 உறுப்பினர்கள் மீது கட்சி நடவடிக்கை எடுக்கும். அவர்களில் பெரும்பாலோர் உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்தவர்கள்.

மேலும் முடக்க நிலையை தளர்த்துவதன் மூலம் ஏற்பட்ட இரண்டாவது தாக்கத்தை அனுபவிக்கும் தென் கொரியா மற்றும் சீனாவின் நிலைமையை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றார்.

# விபத்தில் ஒருவர் படுகாயம்

டிப்பர் ரக லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் மோட்டார் சைக்கிள் சாரதி படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை கொமர்ஸ் பகுதியில் இன்று மதியம் 12.30 மணியளவில் டிப்பர் ரக லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதில் கடும்காயங்களுக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி கொட்டகலை வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டதன் பின் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனவும் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் – நுவரெலியா ஏ – 7 பிரதான வீதியில் நுவரெலியா பகுதியிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் ஹட்டனிலிருந்து தலவாக்கலை பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டர் சைக்கிளும் கொட்டகலை கொமர்ஸ் பகுதியில் இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்துடன் தொடர்புடைய லொறி, மோட்டார் சைக்கிள் ஆகியன பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமையுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மே 20 ஆம் திகதி செயற்படத் தொடங்கும்

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் சில வரையறைகளுடன் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

சுகாதாரத்துறையின் அறிவுறுத்தலுக்கு அமைய வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பணிக்கு அழைக்கப்படவுள்ளனர்.

வாகனங்களைப் பதிவு செய்தல், சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல்–

வாகன இலக்கத் தகடுகளை வழங்குதல் மற்றும் வாகனங்களை ஆய்வு செய்தல், அறிக்கையிடல் உள்ளிட்ட அனைத்து சேவைகளும் வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இடம்பெறும். சேவைகளை பெறுபவர்கள் திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்வது அவசியம். இதற்கான தொலை பேசி இலக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும், மறுஅறிவித்தல் வரை ஒருநாள் சேவை இடம்பெறாது. இதேவேளை, இது குறித்த அறிவித்தல்கள் அனைத்தும் சிங்கள மொழியில் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய அரசின் கீழ் அண்மைக்காலமாக வெளியிடப்படும் அறிவித்தல்கள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே வெளியிடப்பட்டு வருகின்றன. ஊரடங்கு உத்தரவு உள்ளிட்ட அனைத்து அறிவித்தல்களும் தனிச்சிங்களத்திலேயே வெளியிடப்படுகின்றன. சிங்கள மொழி அறிவித்தல் வெளியாகி நீண்ட நேரத்தின் பின்னரே தமிழ் மொழியில் அறிவித்தல் வெளியிடப்படுகிறது.

# நளினி, முருகன் இருவரும் உறவினர்களுடன் 'வட்ஸ் அப்பில்' பேச அனுமதி கேட்டு வழக்கு

## பதிலளிக்க தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு



தமது உறவினர்களிடம் 'வட்ஸ் அப்' மூலம் பேச அனுமதிக்க வேண்டும் என நளினி, முருகன் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில் அதற்கு பதிலளிக்க தமிழக அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதிகளாக இருந்து வரும் நளினி, முருகன் ஆகியோர் சார்பில் நளினியின் தாயார் பத்மா சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ஆள்கொணர்வு மனுவில் –

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு எனது மகள் நளினியும், மருமகன் முருகனும் கடந்த 28 ஆண்டுகளாக சிறையிலிருந்து வருகின்றனர்.

வேலூர் சிறையில் இருவரும் இருந்து வந்த நிலையில் கடந்த வாரம் முருகனின் தந்தை இலங்கையில் காலமானார். இறந்த தனது தந்தையின் உடலைக் காணொலி காட்சி மூலம் காண அனுமதி வழங்கக் கோரிய முருகனின் கோரிக்கையை தமிழக அரசு ஏற்க மறுத்து விட்டது.

எனவே இலங்கையில் உள்ள முருகனின் தாயார் சோமனியம்மாளிடமும், லண்டனில் உள்ள அவரது மூத்த சகோதரி ராஜியிடமும், மகளிடமும் தினமும் 10 நிமிடங்கள் வாட்ஸ் அப்பில் வீடியோ அழைப்பில் பேச அனுமதிக்க வேண்டும். – எனக் கோரியிருந்தார்.

மேலும் எனது மகள் ஏப்ரல் 28 ஆம் திகதி என்னை போனில் அழைத்து வீடியோ கால் தொடர்பான மனுவை தாக்கல் செய்யுமாறு கூறினார்.

இதுதொடர்பாக சிறைத்துறை அதிகாரிகளிடம் மே 4 ஆம் திகதி மனு அளித்தோம். ஆனால் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த விடயத்தில் வீடியோ அழைப்புகளுக்கு அனுமதி அளித்து நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கை நீதிபதிகள் என்.கிருபாகரன், ஆர்.ஹேமலதா ஆகியோர் காணொலி காட்சி மூலம் விசாரித்தனர். வழக்கை விசாரித்த நீதிபதிகள் இந்த மனு தொடர்பாக தமிழக அரசு, சிறைத்துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# எரிபொருள் விலை மின்சாரக் கட்டணம் குறைக்க வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, மே. 16

நுகர்வோருக்கு நன்மையளிக்கும் முகமாக எரிபொருள் விலையை குறைக்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் குறித்து கருத்து தெரிவித்த அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை ஜனவரி முதல் மே வரை 60 வீதமாக குறைந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

எனவே 104 ரூபாயாக உள்ள ஒரு லீற்றர் டீசலை 42 ரூபாய்க்கும். ஒரு லீற்றர் பெற்றோலை 55 ரூபாயாலும் குறைக்க முடியும். ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை 70 இல் இருந்து 28 ரூபாயாகவும் குறைக்கலாம் என்றும் குறிப் பிட்டார்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெயை 10 அமெரிக்க டொலர்களுக்கு வாங்க முடியும் என் றும் அதே நேரத்தில் திறந்த சந்தையில் 28 டொலர்களுக்கு மசகு எண்ணெயை பெற்றுக்கொள்ள முடியும் என் றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை மின்சார உற்பத்தியில் பெரும்பாலானவை எரிபொருளைச் சார்ந்து இருப்பதால் எரிபொருள் விலைக் குறைப்புக்கு ஏற்ப மின்சாரக் கட்டணங்களையும் குறைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2020 இல் வெளியிடப்பெற்றது.